விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஐப்பசி 3 ஜுல்ஹஜ் 20 இதழ் 247
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19-10-1981

## எலிஸபெத் மகாராணி புதன் இலங்கைவருகிறார்

(கொழும்பு)

எலிஸபெத் மகாராணியாரின் இலங்கை விஜயத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமான ஒழுங்குகளை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன மேற்பார்வை செய்து வருகிறார்.

எலிஸபெத் மகாராணியார் தமது கணவர் எடின்பரோ கோமகனுடன் ஐந்துநாள் விஜயத்தை மேற்கொண்டு நாளை மறுதினம் இலங்கைவருகின்றார். மகாராணியும் எடின்பரோ கோமகனும் பிரயாணம் செய்யும் ஆஸ்திரேலிய விமானப்படை ஜெட் விமானம், புதன்கிழமை மாலை நான்கு மணியளவில், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும்.

எலிஸபெத் மகாராணி வியாழக்கிழமை பகல் காலி முக மைதானத்திலும், அதே தினம் மாலையில் கொழும்பு மாநகரசபை மண்டபத்திலும் உரையாற்றுவார். இந்த இரண்டு உரைகளும் சிங்களத்திலும் தமிழிலும் மொழி பெயர்க்கப்படும்.

### கடுமையான பாதுகாப்பு

மகாராணியாரின் விஜயத்தை முன்னிட்டு கடுமையான பாதுகாப்பு நடவடிக்
(6-ம் பக்கம் பார்க்க)

# வீட்டுக்கு வீடு திடீர் சோதனை
# யாழ். மாவட்டத்தில் நீடிக்கும்

## இடைஞ்சல் இல்லாமல் சோதனை நடத்தப்பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரின் சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் வீட்டுக்குவீடு சோதனை நடத்துவதுடன் பொது வீதிகளில் வாகனங்களையும், சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவோரையும் இராணுவத்தினர் சோதனை செய்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

இராணுவத்தினர் சோதனைகள் நடத்துவது தவிர்க்கமுடியாதது என்று கூறும் இராணுவ உயர்பீடம்; இச்சோதனைகளை நடத்தும்போது பொதுமக்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் பார்த்துக்கொள்ளுமாறு பணித்துள்ளதாகத் தெரியவருகிறது

யாழ். நகரில் கே. கே. எஸ். வீதியில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இரண்டு இராணுவத்தினரும் ஒரு மெக்கானிக்கும் பலியாகியுள்ளனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இரண்டுபேரில், ஆபத்தான நிலையிலிருந்த ரவிராஜின் உடல் நிலையில் மாற்றம் கண்டுள்ளதாக நேற்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினர் வன்செயல்களில் ஈடுபடக்கூடிய முறையில் பொதுமக்கள் எவ்விதமாகவும் நடந்துகொள்ளவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இராணுவத்தினர் எந்தநேரமும் தங்களது பரிசோதனையை மேற்கொள்ளலாம். இச்சோதனைகளில் அவர்கள் ஈடுபடுவதற்காகவோ அல்லது ரோந்துபுரிவதற்காகவோ நடமாடும்போது அவர்களின்கோபத்தைத் தூண்டக்கூடிய விதத்தில் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர் என்று இராணுவத்தினர் கூறியுள்ளனர். இந்த நிலைமை தோன்றுதிருக்கப் பொதுமக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### சோதனைகள் தொடரும்

யாழ் நகரில் இராணுவத்தினர் இருவரது கொலைக்கும் பின்னணியிலுள்ள சக்திகளைக் கண்டறிவதில் இராணுவத் தலைமை பீடம் விசாரணைகளைத் துரிதப்படுத்தியிருக்கும் அதே நேரத்தில் பொலிஸ்உயர்பீடத்தின் உதவியுடன் கொலைஞர்களையும் ஆயுதங்களையும் கண்டுபிடிப்பதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

### இராணுவத்தினர் மீது நடவடிக்கை

காங்கேசன்துறை பஸ் நிலையத்தில் பஸ் சாரதி ஒருவரும், காப்பாளர் ஒருவரும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இராணுவத்தினர் இனம் காணப்பட்டு, இவர்கள் மீது உரியநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### இரவுப் படக்காட்சிகள் இல்லை

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்பின்னர் நிறுத்தப்பட்டிருந்த படக்காட்சிகள் நேற்று முன்தினம் பகல் மட்டும் காண்பிக்கப்பட்ட போதிலும் இரவுக்காட்சிகள் இடம்பெறவில்லை. நேற்றும் யாழ் நகரிலுள்ள தியேட்டர்களில் பகல் காட்சிகள் மட்டுமே நடைபெற்றன இரவுக் காட்சிகள் இடம் பெறவில்லை.

### வழக்கம் போல் பஸ் சேவை

பஸ் சேவைகள் யாவும் வழக்கம் போல் நடைபெறுகிறது பிரயாணிகள் தொகை குறைந்த போதிலும் பஸ்
6-ம் பக்கம் பார்க்க

இலங்கைத் தமிழர் பிரச்னை

## எம்.ஜி.ஆர்.தலைமையில் குழு 'இந்திராவை' சந்திக்கும்

சென்னை, அக். 18

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையில் செல்லும் சர்வ கட்சிக்குழுவொன்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியைச்சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து அறிக்கை யொன்றை சமர்ப்பித்து விளக்கவுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஆராய முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனால் இன்று கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் தி. மு. க. இந்திராகாங்கிரஸ், திராவிடர் கழகம் ஆகியகட்சிகள் கலந்து கொள்ளவில்லை.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து அங்கு இடம் பெற்ற வன்முறைச்சம்பவங்கள் பற்றி அறிந்து, சென்னை திரும்பிய தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு பி. நெடுமா
(6ம் பக்கம் பார்க்க)

## கவிஞர் கண்ணதாசன் காலமானர்

சிக்காகோ, அக். 18

கவிஞர் கண்ணதாசன் நேற்று முன்தினமிரவு சிக்காகோவில் உள்ள மருத்துவ மனையில் காலமானர்.

இறக்கும்போது கண்ணதாசன் துணைவியார் அருகிலிருந்தார். கவிஞருக்கு வயது 55.

அமெரிக்காவில் நடைபெற்ற உலகக் கவிஞர்கள் மாநாடொன்றில் கலந்து கொள்ள கடந்த ஜூலை மாதம் சென்ற கவிஞர் அங்கு நோய் வாய்ப்பட்டு சிக்காகோவில் உள்ள மருத்துவ மனையொன்றில் ஜூலை மாதம் 22-ம் திகதி சேர்க்கப்பட்டார். அவரது உடல்நிலை கவலைக்கிடமானதைத் தொடர்ந்து கவிஞரின் மனைவியையும், குடும்ப டாக்டரையும் தமிழக அரசு தனது செலவில் சிக்காகோ அனுப்பி வைத்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 1927-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி பிறந்த கவிஞரின் இயற்பெயர் முத்தையா என்பதாகும். எழுத்துலகில் பிரவேசித்த பின்னர் தனது பெயரை கண்ணதாசன் என்று மாற்றிக்கொண்டார்.

தனது 27 வயதில் 'தென்றல்' என்ற பத்திரிகையை ஆரம்பித்து அதன் பிரதம ஆசிரியராகவிருந்து நடத்தினர்.

ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களை இயற்றிய கவிஞர் இருபதுக்கும் அதிகமான நாவல்களை எழுதியுள்ளார்.

இவரது 'சேரமான் காதலி' என்ற நூலுக்கு சாகித்திய மண்டல விருதும் கிடைத்தது. இலக்கியத்துறையில் பல விருது களைச்சுவீகரித்துக் கொண்ட இவர்;சிறந்த மேடைப்பேச்சாளருமகூட. இவரது எழுத்துக்கும், பேச்சுக்கும் ஒருவித சக்தி உண்டு என்பல அறிஞர்கள் இவரைப் பாராட்டியதுண்டு.

தமிழ்நாடு அரசு, கவிஞரை ஆஸ்தான கவிஞராக நியமித்திருந்தது.

கவிஞரின் பூதவுடலைச் சென்னைக்குக் கொண்டுவர தமிழ்நாடு அரசு ஒழுங்குகள் செய்துள்ளது. கு

## "குள்ளமானவர் கையில் துப்பாக்கி இருந்தது"

### ரவிராஜ் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

"ஜீப்பில் வந்திருந்த இராணுவத்தினருடன் நானும் மெக்கானிக் சுனில் பெர்னாண்டோவும் கதைத்துக்கொண்டு நின்ற பொழுது துப்பாக்கிச் சூடுவிழுந்தது என்று யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் கோண்டாவிலைச் சேர்ந்த ரவிராஜ் (25 வயது) யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்நிலையில யாழ் இராணுவ துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக அளித்த வாக்கு
(6-ம் பக்கம் பார்க்க)

## "என்மீது சுட்டனர்"

### ஜோர்ஜ் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

"சம்பவம் நடந்த இடத்தில் பொலிஸார் நின்றனர். அப்பொழுது நானும் அங்கு போனேன். அச்சந்தர்ப்பத்தில் 2 ஜீப்பில் அவ்விடத்துக்கு வந்த இராணுவத்தினர் என்மீது சுட்டனர் என்று யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் யாழ். பொலிஸ் இணைக்கள எழுதுவினைஞர், ஜோர்ஜ் (35 வயது) யாழ். நீதவான் திரு. ரி ஜோகநாதன் முன்னிலையில் அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமது வாக்கு மூலத்தில் துவக்குச் சூடு விழுந்த சமயம் ஒரு உதவி பொலிஸ் அதிகாரியும் ஒரு இன்ஸ்பெக்டரும் வேறு பொலிசாரும் நின்றனர் என்று தெரிவித்துள்ளார், இவரின் வாக்கு மூலத்தைப்பதிவு செய்த நீதவான் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்து பார்வையிட்டு இரண்டு ஜீப்பில் வந்த இராணுவத்தினரையும் இன்று திங்கட்கிழமை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். (ஊ)

### மணிவாக்கு

குழந்தையொன்று எதைச் செய்தாலும் அதை மகிழ்வுடன் செய்கிறது. நல்ல சாரியத்தில் நேர்மையுடன் இறங்கியிருப்பவன் அதை மகிழ்வுடன் செய்கிறான்.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## பதற்ற நிலைக்குப் பரிகாரம்

யாழ்ப்பாணத்தில் அமைதி வாழ்வு அரும்புஞ் சமயத்தில் மீண்டும் கொலையும் குழப்பமும் தலைதூக்கியிருக்கின்றன.

இரண்டு இராணுவ வீரர் உட்பட மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். கடந்த சில கொலைகள் போல் இதுவும் மர்மமாகவே இருக்கின்றது. இதனை நாம் என்றும் கண்டித்து வருகின்றோம்.

இதனையடுத்து ஆயுதப் படையினர் அட்டகாசஞ் செய்ததாகவும், வன்முறைச் சம்பவங்களில் சுமார் 150 பேர் காயமடைந்ததாகவும் தகவல் கிடைத்திருக்கின்றன.

குடாநாடு ஆயுதப்படையினரின் முற்றுகைக்குட்பட்ட ஒரு பிரதேசமாகக் காணப்படுவது, இவ்வித குழப்பநிலைக்கு எந்த நேரமும் மக்கள் தயாராக இருக்கவேண்டுமென்பது போல் தெரிகிறது.

நாட்டின் பல பாகங்களிலும் பயங்கரவாதக் கொலைகள் அதிகரித்திருக்கிறது உலகிலேயே இவ்செயல்கள் நாளுக்கு நாள் மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றன,

இங்கு நடைபெறும் பயங்கரவாதச் செயல்கள் இதன் எதிரொலியென்று நாம் வாளாவிருக்க முடியாது.

வடக்கில் பொலிசாருக்கும் ராணுவத்தினருக்கும் எதிராக ஒருசக்தி பயங்கரவாதத்தில் முனைந்திருக்கிறதா? அது எது? ஏன் இந்த நிலை தொடர்கிறது? இக்கேள்விகளுக்கு தக்க விடைகாண முடியாத நிலையில் பொலிஸ் விசாரணைகள் இந்தப் பிரச்சினைக்கு விடிவுகாண முடியவில்லை.

இந்த அபாயமான பிரச்சினையில் பொதுமக்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து உதவ முன்வருவார்கள் என்று எதிர்பார்ப்பது மடைமை. பயங்கரவாத நிலைபொன்று நாட்டின் சுவாத்தியத்தில் கலந்திருக்கிறது.

அச்சத்திலும் நடுக்கத்திலும் வாழும் அப்பாவி மக்கள் தங்கள் உயிரையும் உடைமையையும் எந்நேரம் இழக்கலாம் என்ற நிலை இந்தக் குடாநாட்டுக்குரிய ஒரு தனித்துவ நிலையாயிருக்கின்றது. வெளியூர்லும் இது போன்ற அபாய நிலை.

கடந்த குழப்பத்தின் பழங் கணக்குப் பார்க்கு முன்னரே இன்னுமொரு பேரிடியென்றால் இப்பகுதிக்கு அதிகாரமுள்ள ஆட்சி, நடைமுறையில் இல்லை என்ற அர்த்தமா?

மக்களைக் காப்பது மன்னனின் முதற் கடமை. இதற்கேற்ற துரித நடவடிக்கைகளை அடிக்கடி நடக்கும் பொலிஸ் இராணுவ மகாநாடுகள் உதவுமென்று நம்பியிருக்கலாமா?

## யாழ்.பொதுசன நூலகம்

அக்னி பகவானுக்கு ஆகுதியானயாழ். பொதுசன நூலகத்தின் மறுபிறப்பைப் பற்றிய தகவல்கள் மக்களுக்கு உற்சாகம் ஊட்டுகின்றன.

நாகரிக உலகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்திய இக்கொடிய சம்பவம் இப்பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்யும் வகையில் மீண்டுமொரு சிறந்த நூலகத்தை அமைப்பதற்கு உலக அரங்கிலேயே ஆர்வத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

பல சர்வதேச ஸ்தாபனங்கள், மக்கள் குழுக்கள். நூலக நிறுவனங்கள் உதவுகரங்களை நீட்டிவருகின்றன.

அறிவின் அருமையை அறிந்த பெருமக்கள் எங்கு வந்தாலும் இக்கைங்கரியத்துக்கு உதவுவார்களென்பது நாடறிந்த உண்மை. இதற்கு வடக்கு-தெற்கு என்ற பாகுபாடு இல்லை.

சர்வோதயத் தலைவர் வழங்கிய நன்கொடை தென்னிலங்கை மக்களின் பங்கையும் அரசின் பொறுப்பையும் விளக்கவல்லது.

தமிழகம் தன்பங்கைச் சிறப்புறச் செலுத்துமென்பதற்குச் சான்றுகள் பல உள.

ஒன்றரைக் கோடி ரூபா செலவில் திருத்தியமைக்க உதவும் திட்டம், தயாராக விருப்பதாகவும் ஐம்பது லட்சம் ரூபா நிதிசேர்ந்ததும் கட்டடவேலைகள் ஆரம்பமாகுமென்றும் யாழ். நகர முதல்வர் திரு. ஆர். விஸ்வநாதன் தெரிவித்திருப்பது தெம்பளிக்கும் செய்தி. புதுவருடத் தொடக்கத்திலேயே வேலை ஆரம்பமாகுமென்பது பொதுவான நம்பிக்கை

நாம் முன்புகூறியதுபோல "நடப்பதெல்லாம் நன்மைக்கே. ஒரு மிகச் சிறந்த முந்தியதிலும் பார்க்கப் பெருமை வாய்ந்த நூலகம் இப்பகுதி மக்களுக்கு வரப்பிரசாதமாக வரவிருக்கிறது.

யாழ்ப்பாண நூலகம் இப்பகுதி மக்களுக்கு மட்டுமல்ல; அறிவில் ஆர்வங்கொண்ட எவருக்கும் பசி, தாகம் தீர்க்கும் பலதிறப்பட்ட மாபெரும் ஸ்தாபனமாக அமையவேண்டும்.

நூலக அமைப்புத் திட்டத்தின் நிபுணத்துவமும், வற்றாது ஊற்றெடுக்கும் வள்ளல்களின் நிதிஉதவியும் இந்தப் பாரிய பணியைப் பூர்த்திசெய்யத் தேவையான இருபெரும் பொருட்கள்.

உலகின் கவனத்தை ஈர்த்த இப்பெரும் திட்டம் சிறப்பாக யாழ்ப்பாண மக்களின் விழிப்புணர்விலும் வள்ளன்மையிலும் தங்கியிருக்கிறதை நம் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

# 'எப்போதோ முடிந்தகாரியம்'

அமரர் கே. பி. ஹரன்அவர்களின் தனித்துவமான எண்ணங்களை வெளிப்படுத்தும் விதத்தில், அவரது கோவையில் காணப்பட்ட சில குறிப்புக்கள்···

....க.சி.த



டில்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றிய திரு.கே.பி.ஹரன் பாரதப்பிரதமர் பண்டிற் ஜவஹர்லால் நேருவுடன் உரையாடுகிறார்.

'எல்லாம் எப்போதோ முடிந்த காரியம்.' கொழும்புத்துறை முனிவரின் இந்த வேத வாக்கு. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பாக சென்னையிலிருந்து என்னைக் கொழும்பு 'வீரகேசரி'க்கு அழைத்து வந்த சமயம் எனக்குத் தெரியாது.

இலங்கையில் ஒரு வருடம் இருந்து பார்த்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பிவிடவேண்டுமென்று நினைத்திருந்தேன். மூன்றாண்டுகளுக்காவது தொண்டாற்றவேண்டுமென்றும், அதுவே தங்கள் வழமையான வேலை நிபந்தனை என்றும் 'வீரகேசரி அதிபர் எனக்குச் சொன்னார்'கள்.

ஆனால் பல சோதனைகளுக்கும் தப்பி, இப்போது 40 ஆண்டுகள் ஈழத்துப் பத்திரிகைப் பணியில் ஓடிவிட்டதை நினைத்துப்பார்க்கையில் பெரியார் யோக சுவாமிகளின் வேத வாக்குத்தான் நினைப்புக்குவருகிறது. எல்லாம் எப்போதோ ஏற்பாடுசெய்யப்பட்டுவிட்ட காரியமாம். நமக்கு என்ன புரிகிறது! இன்னும் என்னென்ன நடக்குமோ எல்லாம் எமை ஆளும் ஈசன் செயல்! ஒன்றுமட்டும் நிச்சயம். இதுவரை நடந்துள்ளவை கசப்போ இனிப்போ எல்லாமே நன்மைக்குத்தான். இனியும் அப்படித்தானே இருக்கமுடியும்!

⁂ ⁂ ⁂

1939-ம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் "வீரகேசரி" பத்திரிகையின் அதிபராக இருந்த பி. பி. ஆர். எஸ். செட்டியார் அவர்கள், சென்னையில் எங்கள் வீட்டுக்கு வந்து இலங்கைக்கு வருகிறீர்களா என்று கேட்டார். மனதுக்குள் மகிழ்ச்சி; பெருமை. ஒப்புக்கொண்டேன். அப்போது 'வீரகேசரி' 5000 பிரதிகள் இருப்பதாகச் சொல்லி 'அதற்குக் குறையாமல் பார்த்துக்கொள்ளவே உங்களை அழைத்துச் செல்கிறோம்' என்றார்.

இலங்கையைப் பற்றி முன்பின் எதுவுமே தெரியாதநிலையில் இதற்கு என்ன பதில் சொல்ல! அதிபருக்குத்தான் என்மீது எவ்வளவு நம்பிக்கை! அந்த நம்பிக்கைக்குத் தகுதியாகவேண்டுமேஎன்ற பயபக்தியுடன் 'வீரகேசரி'ப் பணியை ஏற்றேன்.

அக்காலத்தில் கொழும்பில் இந்தியரின் கடைகளை மறியல் செய்யும் இயக்கம், ஏ. ஈ. குணசிங்க அவர்களின் தலைமையில் நடைபெற்றுவந்தது. இந்திய முன்பின் தெரியாத வேறுநாட்டுக்குச் சென்று பத்திரிகைப் பணியில் ஈடுபடுவதென்றால், மனதுக்குச்சற்றே தயக்கமாக இருந்தது. இலங்கைக்கு வர அழைப்பு வந்துள்ளதாகவும், சற்றே கூடுதலான வேதனம் அளித்து, உற்சாகமூட்டினால், இந்தியாவிலேயே தங்கிவிடுவதாகவும் 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையின் நிர்வாகிகளுள் ஒருவரான ஒரு செட்டியாரிடம் சொன்னேன். அதற்கு அவர் சம்மதப்பட்டிருப்பின், அங்கேயே இருந்திருப்பேன். இங்கு வந்திருக்கமாட்டேன் "உங்களுக்குக் கூடுதல் சம்பளம் கொடுக்கலாம். ஆனால் உங்களுக்குக் கொடுத்தால், மற்ற

### ★ ஜயாறன்

எதிர்ப்பு இயக்கம் நடக்கும் இச்சமயத்தில், என்னை அங்கு அழைத்துச் செல்கிறீர்களே என்று அதிபர் அவர்களைக் கேட்டேன். "இரு' என்று சொல்லுகிறவரையில் இருக்கலாம்! போ என்றால் போய் விடலாம்" என்று யோசனை சொன்னார்! அதாவது எந்தச் சமயமும் எதுவும் நடக்கலாம் என்று சொல்லாமற் சொன்னார்; பத்திரிகைத்தொழிலே அப்படித்தானே!

அதிபர் அவர்களை எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்தது, புகழ்பெற்ற எழுத்தாளரான வ. ரா அவர்கள். பாரதியார் அவர்களின் நண்பர். திருவையாற்றுக்குப் பக்கத்திலுள்ள திருப்பழனம் அவரது சொந்த ஊர். 'வீரகேசரி'ப் பத்திரிகையில் ஒருவருடம் ஆசிரியராக இருந்தவர்.

'வீரகேசரி' ஆசிரியர் ஹரிஹர நல்லையா அவர்கள் ஒருவருட காலம் இந்தியாவுக்குச் செல்லநேர்ந்த சமயத்தில், வ. ரா. ஆசிரியர் பொறுப்பை ஏற்று, அவர் திரும்பியபின் விலகினார் அச்சமயம், சென்னையில் நடைபெற்றுவந்த 'ஹிந்துஸ்தான்' வாரப்பத்திரிகையில் தொண்டாற்றி வந்தேன்.

"ஓய் உமக்கு நல்லகாலம் வந்துவிட்டதுங்காணும். 'வீரகேசரி' நல்ல பத்திரிகை அதில் ஒருவருடம் இருந்தேன். பயப்படாமல் ஒப்புக்கொள்ளும். செட்டியார் சம்பளத்தை தாராளமாகக் கொடுப்பார்" என்று உற்சாகமூட்டினார். முன்னர் 'கேசரி'யில் தொண்டாற்றிய ஓர் அன்பர், 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையில் எங்களுடன் உதவி ஆசிரியராக இருந்தார். அவரும் இதே போலக் கூறியது, எனக்கு மேலும் நம்பிக்கை அளித்தது. தாய்நாட்டை விட்டுவிட்டு எல்லாருக்கும் கொடுக்க வேண்டியிருக்குமே" என்று சொல்லிவிட்டார். கடைசி வரை தாய்நாட்டை விட்டு வெளியேற மனம் ஒப்பவில்லை.

ஆனால் இறைவனின் சித்தம் வேறாக இருக்கையில் நம் இஷ்டப்படி என்ன நடக்கமுடியும்? எல்லாம் எப்போதோ முடிந்துவிட்ட காரியம். "வீரகேசரி"யிலிருந்து பணமும் வந்துவிட்டது அக்காலத்தில் 'பாஸ்போர்ட்', 'விஸா' எதுவும் கிடையாது இங்கிருந்து வந்திருந்த கடிதத்தைக்காட்டி கப்பல் ஏறிவிட்டேன். மனதில் ஒருவித துக்கம், ஏக்கம். மறுபக்கம் எதிர்காலம் பற்றிபுதிய நம்பிக்கை. இறைவா, எல்லாம் உன்செயல்.

# மக்கள் கருத்து

### அபிவிருத்தி சபையின் கவனத்திற்கு

சாவகச்சேரி கிராமசபைக்குட்பட்ட சரசாலை தெய்வங்கேணி வீதி பதின் மூன்று வருடங்களாகத் திருத்தப்படாமல் உள்ளது. அவ்வீதியால் மழை கால ங்களில் வாகனங்களோ பாதசாரிகளோ செல்லமுடியாத வண்ணம் குன்றும், குழிகளுமாகக் காணப்படுகின்றது. இந்த வீதியைத் திருத்தும்படி சாவகச்சேரிக் கிராமசபை, பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இப்பொருத்த பனங்களும் பல்முறை முறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அபிவிருத்தி சபையின் கவனத்திற்கு இதனைச் சமர்ப்பிக்கின்றோம்.

கே. எம். மனோகரன்
தலைவர்

க. சிவசங்கரநாதன்
செயலாளர்,

சரசாலை இந்து இளைஞர் மன்றம்

## நல்லை இசைவிழாவில் இன்று

(அரியாலை)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றுவரும் யாழ். ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி இசைப் பகுதியின் இரண்டாவது இசைவிழா 10 வது தினமான இன்று திங்கட்கிழமையுடன் முடிவடைகிறது, இன்றைய நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

மாலை 6-00 மணி — உயர் கலைக்கல்லூரி மாணவிகளின் நடனம், 6-30 மணி — நடன ஆசிரியர் திரு. தா. தொம்மைக்குட்டியின் மாணவிகள் நடனம், 7-00 மணி — திரு. ராஜலிங்கம் பாட்டு, எஸ். சர்வேஸ்வரசர்மா — வயலின், திரு. பி சின்னராசா—மிருதங்கம், மாலை 8-00 — 9-00 —

(6-ம் பக்கம் பார்க்க)

ரீகல் REGAL
10-30, 2-15, 4-45, 7-00, 9-30
14-ந் திகதி முதல் 19 வரை
James Mason, Antony Quinn நடித்த
"PASSAGE" "பசேச்"
கொழும்பில் மாதக்கணக்கில் ஓடிய சினிமைப்படம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — தேவிகா
பச்சை விளக்கு

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 930
எம். ஜி. ஆர்.
மீனவ நண்பன்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
நினைத்தாலே இனிக்கும் (கலர்)

லிடோ (யாழ். நகர்)
Daily 10-30, 2-30, 4-45 7-15 & 9-30
WHITE LINE FEVER (Color)

8 வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி ... துளசிரசம்
சங்கராபரணம் (கலர்)

ராணி 9வது வாரம் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்கியராஜ், சுமதி மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

சாந்தி 5வதுவாரமாகப்பூட்டும்ஹவுஸ்புல் வாரம் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9 45
கமல்... ஸ்ரீதேவி...
குரு
நம்பியார் வெண்ணிறஆடை நிர்மலா- முத்துராமன்- சுந்தரராஜன்
காட்சிகள் வழமைபோல் நடைபெறும்.

(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
மேஜர் சுந்தரராஜன் - நாகேஷ்
ஜெயலலிதா - ஏ.வி.எம். ராஜன்
மேஜர் சந்திரகாந்த்
இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி
From 20-10-81
AIRPORT 77
Scope—Color

மனோகரா (யாழ்ப்பாணம்) 22-10-81 மட்டும்
தினசரி4காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-30
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
ஏ. வி. எம். ராஜன் நாகேஷ்
A. V. M. தயாரிப்பு
நானும் ஒரு பெண்
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
ராமு

வின்ஸர் இப்பொழுது நடைபெறுகிறது
மகத்தான தீபாவளி வெளியீடு
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஸ்டைல் நடிகர், வசூல் மன்னன் — கேரளத்துப் பைங்கிளி
ரஜனி காந்த் சீமா (இரு வேடம்)
விஜயகுமார், படாபட், சுருளிராஜன், மனோரமா, மற்றும் பலர் நடித்த
காளி
விறுவிறுப்பான டைரக்ஷன்... I V சசி
இனிமையான இசையமைப்பு ...இளையராஜா
கருத்தான வசனம் ...'தங்கப்பதக்கம்' மகேந்திரன்
வண்ணப் படப்பிடிப்பு ...தேசியவிருது பெற்ற அஷோக்குமார்
சினிமாஸ்கோப்—கலர்


## நீண்டகால வாழ்க்கை

# ஆசியாவில் இலங்கை முதலிடம் வகிக்கிறது!

[கொழும்பு]

ஆசியாவில், நீண்டகாலம் வாழ்பவர்கள் இலங்கையர் தான் என்று புள்ளிவிபரமதிப்பீடு ஒன்று கூறுகிறது.

ஆசியாவில், இலங்கையருக்கு அடுத்த இடத்தை மலேசியர்களும், சிங்கப்பூர் இனத்தவர்களும் வகித்துள்ளனர். இலங்கையரின் சராசரி வயது 69 என்றும் மலேசியா, சிங்கப்பூர் இனத்தவர்களின் சராசரி வயது 68 என்றும் மதிப்பீடு தெரிவிக்கிறது.

ஆசியாவில் மிகவும் குறைந்த கால வாழ்க்கையைக் கொண்டவர்கள் நேபாளத்தவர்களும் பங்களாதேஷ் இனத்தவர்களுமாகும். இவர்களின் சராசரி வயது 45 முதல் 47 ஆகும். இந்தியரின் சராசரி வயது 52 ஆகும்.

புள்ளிவிபரம் கூறும் ஏனைய தகவல்கள் வருமாறு:

பிறப்பு விகிதத்தில்; சிங்கப்பூரில் ஒவ்வொரு ஆயிரத்துக்கும் பதின்மூன்று மரணங்களும், மலேசியாவில் ஒவ்வொரு ஆயிரத்துக்கும் இருபத்தெட்டு மரணங்களும் இலங்கையில் ஒவ்வொரு ஆயிரத்துக்கும் நாற்பத்திரண்டு மரணங்களும் ஏற்படுகின்றன.

பங்களாதேஷில் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் 139 குழந்தைகள் மரணிக்கின்றன. இந்தியாவில் 1000 குழந்தைகளுக்கு 131 குழந்தைகள் மரணிக்கின்றன.

# 'நடைமுறையில் தமிழுக்கு உரிய இடம் இல்லை'

## புகையிரத ஊழியர்சங்கத் தலைவர் கண்டனம்

[உடுப்பிட்டி]

"அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ்மொழி தேசிய மொழியாக இருந்தபோதிலும் நடைமுறையில் தமிழ் மொழிக்கு உரிய இடம் அளிக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரியதே"

இவ்வாறு இலங்கை புகையிரத ஊழியர்சங்கத் தலைவர் திரு. தி. அ. மரியநாயகம் காங்கேசன்துறை புகையிரத சமூக மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. தி. அ. மரியநாயகம் தொடர்ந்து பேசுகையில்,

"இந்த நாட்டில் தொழிற்சங்கங்கள் உருவாக்கப்பட்டபோது தமிழ்ஊழியர்கள் பலர் அதற்காக முன்நின்று உழைத்தார்கள். ஆனால் இங்கே மொழிச்சட்டத்திற்குப் பின்னர் தமிழ்ஊழியர்கள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். இதனைத் தொடர்ந்தே மொழிவழித் தொழிற்சங்கங்கள் உருவாக முயற்சி எடுக்கப்பட்டது.

"இன்றைய நிலையில் மொழி உரிமைகளைப் பெறுவதற்கு மொழி வழித்தொழிற்சங்கங்கள் ஒற்றுமையுடன் செயற்பட முன்வரவேண்டும்.

"தமிழ் மொழி தேசிய மொழியாக விளங்கிய போதிலும் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் பலவற்றுடன் தமிழில் தொடர்பு கொண்டால் சிங்கள மொழியிலேயே பதில் கிடைக்கின்றது. அப்படியானால் தமிழ் மொழி தேசிய மொழியாக விளங்குவதிலுள்ள அர்த்தம் என்னவென்று புரியவில்லை" என்று கூறினார்.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. எம். இராஜேந்திரம் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

## ஏகதின லக்ஷார்ச்சனை

(சுழிபுரம்)

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வரும் வெள்ளிக்கிழமை ஏகதின லக்ஷார்ச்சனை நடைபெறவுள்ளது. நியாயசிரோமணி(?) பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள், பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அர்ச்சனையை நடாத்திவைப்பார்கள்.

## மணற்காட்டில்

# 'குத்துக்காயங்களுடன் மனைவி இறந்துகிடந்தார்'

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

"சம்பவதினம் வழமை போல் வீட்டிற்கு வராத எனது மனைவியைத் தேடி மணற்காட்டிற்குப் போன போது முகத்தில் குத்துக்காயங்களுடன் எனது மனைவி இறந்து கிடந்தார். அருகில் சரஸ்வதி குற்றுயிரில் கிடந்தார். அவர்களுக்கு சுமார் 50 யார் தூரத்தில் இரத்தம் படிந்த [illegible] கொன்றைப் பொலிசார் மீட்டனர்".

இவ்வாறு வல்லிபுரக்கோவிலுக்கு அண்மையிலுள்ள மணற்காட்டில் குத்துக்காயங்களுடன் இறந்துகிடந்த துன்னாலையைச் சேர்ந்த மீன் விற்பனை செய்யும் பெண் தனபாலசிங்கம் செல்லக்கிளியின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் கணவன் முத்தன் தனபாலசிங்கம் (வயது-44) குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தின் நீதவான் திரு வே. எஸ். மகேசன் முன்னிலையில் இம்மரண விசாரணை நடைபெற்றது. பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு என். சிற்றம்பலம் சாட்சிகளை நெறிப்படுத்தினார். இறந்தவரின் நலன்களைக் கவனிக்கும் முகமாகச் சட்டத்தரணிகளான எஸ். இளங்குசுந்தரம் (காண்டீபன்) செல்விகள்- எல். சி. பிலிப், விஜயராணி மகாதேவா ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த தனபாலசிங்கம் குறிப்பிட்டதாவது;

எனது மனைவியின் பெயர் செல்லக்கிளி அவர் மீன் வியாபாரம் செய்பவர். மணற்காட்டிற்குச் சென்று மீன் வாங்கி பருத்தித்துறை மீன்சந்தையில் வியாபாரம் செய்வது அவரது வழக்கம் அவர் வழமையாக வீட்டிலிருந்து காலை 6மணிக்கு மீன் வாங்குவதற்கு மணற்காட்டிற்கு செல்வார் போகும் போது காலைச் சாப்பாட்டையும் கொண்டு செல்வார்.

அன்று காலைச்சாப்பாடாகப் பாண் கொண்டு சென்றார். அத்துடன் மீன் வியாபாரத்திற்குத் தேவையான சுளகு, பெட்டி என்பனவற்றையும் கொண்டுசென்றார்.

### தோட்டைக் காணவில்லை

போகும்போது அவரது காதில் ஒரு சோடி தோட்டைத் தவிர வேறு நகைகள் இருக்கவில்லை. அன்றைய தினம் வழக்கம்போல் எனது மனைவி வீட்டிற்குத் திரும்பவில்லை. அவருடன் கூடப் போகும் ஆழ்வாள் சரஸ்வதி என்பவரும் அன்றையதினம் வழமைபோல் வீடு திரும்பவில்லை என அறிந்தேன். எனவே மனைவி வியாபாரம் செய்யுமிடங்களுக்குச் சென்று விசாரித்தேன். ஆனால் மனைவி பற்றிய தகவல் ஒன்றும் எனக்குக் கிடைக்கவில்லை

பின்பு எனது ஊரிலிருந்து மணற்காட்டிற்குச் சென்று மீன் வாங்கி வியாபாரஞ்செய்யும் மற்றும் பெண்களிடம் எனது மனைவி மணற்காட்டிற்குச் செல்லும் வழியை விசாரித்து அவர்களிலும் சிலரைக் கூட்டிக்கொண்டு மனைவியைத் தேடி மணற்காட்டுப்பக்கம் போனேன்.

"நாங்கள் போகும்போது ஒரு தனிப்பனை நின்றது. அதன் ஒரு பக்கத்தில் எனது மனைவியும் மற்றப்பக்கத்தில் சரஸ்வதியும் விழுந்துகிடக்கக் கண்டேன். எனது மனைவி கொண்டுசென்ற கடகம், சுளகு, என்பன வீசப்பட்டுக் கிடந்தன. முகத்தில் குத்துக் காயங்கள் காணப்பட்டன. காதிலிருந்த தோடுகளைக் காணவில்லை, எனது மனைவி இறந்துகிடந்தார். சரஸ்வதிக்

(2ம் பக்கம் பார்க்க)

# இன்று நடைபெறும் சமரச மகாநாடு

(புலோலி)

அண்மையில் கம்பர்மலை கொம்மந்தறைப் பகுதியில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் கொலைகள் மேலும் தொடராது தடுப்பதற்கான சமரச மகாநாடொன்று யாழ். அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு சு. நடராசா தலைமையில் நடைபெறும் இச்சமரச மகாநாட்டில் யாழ் அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா, யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. எம். தம்பிமுத்து, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும், கெருடாவில், உடுப்பிட்டி கிராமசேவை அலுவலர்கள் கலந்து கொண்டு சமாதான நடவடிக்கைகள் பற்றி ஆராயவுள்ளனர்.

இம்மகாநாட்டில் பிரஸ்தாப பகுதிகளில் நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளவேண்டிய முயற்சிகள் பற்றியும் ஆராயப்படும். (அ)

## "செல்வந்தப் பிள்ளைகளுடன் சமமாக ஏழைகளும் கல்விவாய்ப்பு அளித்த பெருந்தகை"

(அரியாலை)

"செல்வந்தர்களின் பிள்ளைகள் கட்டணம்செலுத்திக்கற்ற உயர்கல்வியை ஏழைமக்களும் எவ்வித பேதமுமில்லாமல் பெறுவதற்கு ஏற்றவகையில் இலவசக்கல்வியை எமது இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவந்த இலவசக்கல்வியின் தந்தை அமரர் சி. டபிள்யூ டபிள்யூ கன்னங்கரா என்றும் நினைவு கூரப்படவேண்டியவர்".

இவ்வாறு யாழ். நல்லூர் ஸ்தான சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற அமரர் கன்னங்கரா ஞாபகார்த்ததின வைபவத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கல்லூரி உபஅதிபர் திரு எம் முத்துக்குமாரு குறிப்பிட்டார்.

உபஅதிபர் தொடர்ந்து பேசுகையில், "இனவாள் கன்னங்கராவினால் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட, அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட இலவசக்கல்வியால் இன்று இந்நாட்டிலுள்ள சகலரும் கல்வியறிவைபெற வாய்ப்புக் கிடைத்தது. கிராமங்களில் வாழும் ஏழை மக்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. கற்போரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. ஏழைமக்களின் அறிவை வளம்படுத்த இலவசக்கல்வி பெரிதும் உதவுகிறது" என்று குறிப்பிட்டார்.

வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் சார்பில் கல்விஅதிகாரி திரு கு. சோமசுந்தரமும், ஆசிரியை செல்வி வ. பொன்னம்பலமும், இலவசக் கல்வியின் சிறப்பிான அமரர் கன்னங்கராவின் சேவைகள் பற்றி எடுத்துரைத்தார்கள். (அ)

## நல்லை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கெஞ்சிறக்சேரி — திரு. என். பத்மநாதன் — நாதஸ்வரம், திரு. எஸ். குமரகுரு — தவில், திரு. யூ. ராதாகிருஷ்ணன் — வயலின், திரு. ஏ. சந்தானகிருஷ்ணன் — மிருதங்கம், திரு கே. கணேசபிள்ளை — கெஞ்சிரா, திரு. எஸ். எம். ஜேம்ஸ் — முகர்சிங், திரு. எஸ். நடராசா — கடம்.

இரவு 9-00 — 10-00 வில்லிசை — கலைவாணர் இசைக்குழுவினர். (அ)

## வீட்டுக்கு வீடு திடீர் சோதனை...

1ம் பக்கத் தொடர்ச்சி

சேவைகளில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் நேற்றுமுதல் தூரஇடங்களுக்கான சகல பஸ் சேவைகளும் ஆரம்பமானது என்றும் வ பி இ போ ச அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'விடம் தெரிவித்தார்

யாழ் நகரில் மக்கள் நடமாட்டம் நேற்றுக்காலை சற்றுக்கூடுதலாகக் காணப்பட்ட போதிலும் பிற்பகலில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது. அநேகமான கடைகள் பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன.


ஹோம் பினன்ஸ்

லிமிட்

"HOME MATE"

ஹோம் மேற்

(MADE IN JAPAN)

1/3 ஹோஸ் பவர்

மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும் மின்சார இயந்திரம் விற்பனைக்குண்டு

வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

விலை ரூ. 1600/-

விபரங்கட்கு:

ஹோம் பினன்ஸ் லிமிட்,

82, கன்னாதிட்டி வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 8310


## மணற்காட்டில் பெண் சடலம்: கொலை எனத் தீர்ப்பு

(புலோலி)

வல்லிபுரக் கோவிலுக்கு அண்மையில் மணற்காட்டில் குத்துக்காயங்களுடன் இறந்துகிடந்த மீன்விறபனைப் பெண்ணின் மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

தன்னுவையைச் சேர்ந்த தனபாலசிங்கம் செல்லக்கிளி (வயது 44) என்ற இப்பெண்ணின் மரணம் சம்பந்தமான மரணவிசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்றது.

பிரேத பரிசோதனையை மேற்கொண்ட பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள் சாட்சியமளிக்கையில், இறந்தவரின் முகத்தில் எட்டுக் காயங்கள் இருந்ததாகவும், அக்காயங்கள் எல்லாம் குத்தப்பட்ட காயங்கள் என்றும், வாயாலும் நாசியாலும் இரத்தம் வந்திருந்ததாகவும், மூளை சேதப்பட்டிருந்ததாகவும், சுவாசத்தடையினால் மரணம் சம்பவித்ததாகவும் தெரிவித்தார்.

நீதவான் இப்பெண்ணின் மரணம் கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

## பஸ்சாரதி, காப்பாளர் பலத்த காயம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பஸ் நிலையத்தில் பஸ் சாரதி ஒருவரும் காப்பாளரும் சனிக்கிழமை ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து பஸ் சேவை அன்று காலை 1 மணித்தியாலம் செயல்படவில்லை.

மல்லாகத்தைச் சேர்ந்தவர்களான சாரதி கே. சோமசுந்தரம் (50 வயது), காப்பாளர் திரு. விநாயகமூர்த்தி (45வயது) ஆகியோர் காங்கேசன்துறை பஸ் நிலையத்தில் வைத்து ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டனர் இதனைத்தொடர்ந்து சேவையிலீடுபட்ட பஸ்கள் அந்தந்த இடத்திலேயே ஸ்தம்பித்தவிட்டன.

காயமடைந்த இருவரும் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, வடபிராந்திய போக்கு வரத்து சபைத் தலைவர் எஸ். கனகரத்தினம் மற்றும் அதிகாரிகள் ஆஸ்பத்திரியில் சென்று காயமடைந்தவர்களைப் பார்வையிட்டனர். (மா-க)

## மகாராணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பதினாறாயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுவார்கள்.

இதுகுறித்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் தெரிவிக்கையில் மகாராணியாரின் விஜயத்தைவெட்டிப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் 16 ஆயிரம் பொலிஸாரில் 10 ஆயிரம் பொலிஸார் எந்த நிலைமையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் திறமைபடைத்தவர்கள் என்றும், இவர்கள் இரண்டுமாத விசேஷ பயிற்சி பெற்றவர்கள் என்றும் கூறினார்.

கொழும்பு தவிர்ந்து ஏனைய இடங்களில் மூவாயிரத்துக்கும் அதிகமான பொலிசார் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## ரூ. 15 ஆயிரம் கொள்ளை: இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

மயிலங்காட்டில் நடைபெற்ற வழிப்பறிக்கொள்ளை சம்பந்தமாக இரு இளைஞர்கள் சுன்னாகம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பறித்தெடுத்ததாகக் கூறப்படும் ரூபா 15 ஆயிரத்தையும், ரூ 950 காசோலையையும் மூக்குக்கண்ணாடியையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

குப்பிளானைச்சேர்ந்த சுப்பிரமணியம் கதிரமலை, விஸ்வலிங்கம் சங்கரலிங்கம் ஆகிய இரு இளைஞர்களுமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை மகேந்திரம் என்பவர் பேக்கரிக்கு சைக்கிளில் மாவாங்கச் சென்றபோது சந்தேகநபர்கள் இருவரும் வழியில் மறித்து அவரைத் தாக்கிவிட்டு 15000 ரூபாவையும் 950 ரூபா காசோலையையும் அவரது மூக்குக் கண்ணாடியையும் பறித்துக் கொண்டோடியதாக சுன்னாகம் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இவர்கள் இருவரும் இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

## இலங்கைத்தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றன் ஆகியோரின் அறிக்கைகளை அடிப்படையாக வைத்து இலங்கைத்தமிழர் பிரச்சினை பற்றிய அறிக்கையைத் தயாரித்துப் பிரதம மந்திரி இந்திராகாந்தியிடம் கையளிப்பதென்றும் இம்மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதம மந்திரியைச் சந்திக்கும் இக்குழுவில் தமிழ்நாடு சட்டசபை, சட்டமேலவை உறுப்பினர்களும், சபாநாயகரும் இடம் பெறுவார்கள் (வெ)

## குள்ளமானவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

"நானும் மெக்கானிக்சுனில் பெர்னாண்டோவும் ஒரு மின்சார இஸ்திரிக்கைப் பெட்டி வாங்குவதற்காக 300 ரூபாவுடன் சென்றோம். சம்பவம் நடைபெற்ற இடத்தில் இராணுவத்தினர் நின்றதைக்கண்டோம், இவர்கள் எமது சிநேகிதர்கள் இவர்களுடன் நாங்கள் கதைத்துக் கொண்டிருந்த பொழுது திடீரென துப்பாக்கிச்சூடு விழுந்தது. நான் திரும்பிப்பார்த்தேன், 'பிறவுண்' நிற நீளகாற்சட்டை வெள்ளை சேட் அணிந்திருந்த ஒருவர் சைக்கிளில் நின்று கொண்டிருந்தார். இவர் கையில் சிறிய துப்பாக்கி இருந்தது.

"இவர் மெலிந்த தேகமுடைய குள்ளமானவர், கறுப்புநிறமுடையவர், என் மீதும் துப்பாக்கிச் சூடுவிழுந்ததும் நான் கீழே மயங்கி வீழ்ந்துவிட்டேன். (மா)

## கண்ணதாசன்பூதவுடல் புதனன்று சென்னை வரும்

சென்னை, அக் 18

சிக்காகோ மருத்துவமனையில் நேற்று முன்தினமிரவு காலமான தமிழ்நாடு ஆஸ்தானகவிஞர் கண்ணதாசனின் பூதவுடல் எதிர்வரும் புதன்கிழமையன்று சென்னைக்குக் கொண்டுவரப்படுமென அறிவிக்கப்பட்டது.

கண்ணதாசனின் மறைவு குறித்து தி மு. க தலைவர்கருணாநிதி தென்னிந்திய நடிகர்சங்கத் தலைவர் திரு எஸ் எஸ் ராஜேந்திரன் ஆகியோர் அனுதாபம் தெரிவித்துள்ளனர். (வெ)

(கொழும்பு)

யாழ் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்குப் பொறுப்பானவர்கள் விபரங்களைத் தெரிவிப்பவர்களுக்கு 5 லட்சம் ரூபா ரொக்கபபரிசாக வழங்க பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி பழனி சீதை

கோண்டாவில் கிழக்கு காலஞ்சென்ற வே. பழனியின் அன்புமனைவி சீதை காலமாகிவிட்டார். இவர் சிலோன் மணி, கண்மணி, தவமணி, மகேஸ்வரி, மயில்வாகனம் பஞ்சலிங்கம் (லிகிதர் தேசிய இளைஞர் சேவை மன்றம் செயலாளர், நாராயண கி. அ சங்கம்) ஆகியோரின் தாயாரும், சின்னப்பு, நடராசா (புகையிரதப் பகுதி யாழ்ப்பாணம்), புஸ்பநாதன் (மாநகரசபை), ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று திங்கட்கிழமை (19-10 81) மாலை 2மணிக்கு கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை சகலரும் ஏற்றுக்கொள்ளவும். 1264

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் சுப்பிரமணியம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூர் வாசியுமான வல்லிபுரம் சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். இவர் நாகம்மாவின் அன்புக்கணவரும், கனகரத்தினம் (கச்சேரி தலைவர் அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் யாழ் கிளை), குமாரசாமி (கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற பாலசிங்கம் (மலேரியா தடுப்பு இயக்கம்), குலசிங்கம் (இலங்கை வங்கி பருத்தித்துறை, பராசக்தி, பாக்கியலெட்சுமி, மல்லிகாதேவி (விற்பனை திணைக்களம் நல்லூர்), ஆகியோரின் அன்புத்தந்தையும், ரி. நடராசா (முரசுமோட்டை), சி கனகசபை D. O. சமநலச் சேவை முல்லைத்தீவு), திலகவதி, புஸ்பராணி, தவமணி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரது கட்டப்பிராய் இல்லத்திலிருந்து இன்று திங்கட்கிழமை (19-10-81) பிற்பகல் 2மணிக்கு செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 1265

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 19ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது, Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna, தொலைபேசி 7707, 389, 8126.